1993 மார்ச் 17]

இருக்கின்றன. அப்பகுதிகளில் இந்த வரப்பு திரட்டும் திட்டத்தின் மூலம், வேலை வாய்ப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்கின்ற கருத்தின் அடிப்படையில் அந்த நிலங்கள் ஆய்வுக்கு மேற்கொள்ளப்படும். அது போன்று வேளாண்மைத் திட்டங்களுக்குத் தகுதியற்ற நிலங்களாக இருக்குமென்று சொன்னால் அதனை கருத்திற் கொண்டு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 116, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண். 117, திரு. கே. செல்வராஜ், இருக்கயைில் இல்லை, அவருக்கு பதிலாக திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

117—

சத்துணவு பெறும் குழந்தைகளுக்கு தமிழ், ஆங்கிலப் பாடங்கள் கற்றுக் கொடுத்தல்

*9164—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்குத் தமிழ், ஆங்கிலப் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போதிருந்து அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு தமிழில் முன் பருவக்கல்வியும் ஆங்கிலத்தில் மழலையர் பாடல்களும் (Rhymes) தற்போது கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. பி. ராஜு: பேரவையினுடைய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆங்கிலமும், தமிழும் கற்றுக்கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதனோடு கூட தமிழகத்தை 11 ஆண்டுக் காலம் ஆண்ட, இரண்டு மூன்று வயது குழந்தைகளுக்குப் பசிக்கும் என்று தெரிந்து மதிய உணவு வழங்கிய புரட்சித் தலைவர் வாழ்க்கை வரலாற்றையும், வீராங்கணையாகத் திகழ்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும், அந்தப் பால் பருவம் கொண்ட குழந்தைகளுக்கு கற்றுகொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மான்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 முதல் 5 வரை வயது உள்ள குழந்தைகளுக்குத் தான் இந்தத் திட்டங்கள் அமுல் படுத்தப்படுகின்ற காரணத்தால், அந்த வாழ்க்கை வரலாற்றை படிக்க கூடிய அளவுக்கு இந்தக் குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி அந்த நேரத்தில் வராத காரணத்தினால் இப்பொழுது இது பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆனால் பள்ளி களில் சத்துணவு உண்ணுகின்ற மாணவர்களுக்கு இப்படிப்பட்ட வாழ்க்கைக் கல்விகள் பாடமாக அமைந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். முருகையா பாண்டியன்.

முற்பகல் 10–50

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுக் கூடங்களில் தமிழும், ஆங்கிலமும் கற்றுக் கொடுப்பதை நான் நேரிலேயே பார்த்தேன். மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இருந் தாலும் கூட அங்கே அமைப்பாளர்களாக வேலை பார்ப் பவர்கள் எல்லாம் 10 ஆம் வகுப்பு தேறியவர்கள் தான் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காலையிலே தமிழும், மதியத்திற்கு மேலே ஆங்கிலமும் என்ற முறையில் சொல்லிக் கொடுக்கும் போது ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுப்பதற்கு ஆங்கிலம் தெரிந்த பட்டதாரி ஆசிரியர்களைக் கூடுதலாக நிய மனம் செய்ய அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா, இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க 10–வது

1993 மார்ச் 17]

வரை படித்து இருந்தால் போதும் என்பதை உலக வங்கியே உத்திரவாக அளித்து இருக்கிறார்கள். ஆகவே $9\frac{1}{4}$ மணியிலிருந்து $9\frac{1}{2}$ மணி வரை தமிழ்க் கல்விக்கான பாடமும், 10 மணியிலிருந்து $10\frac{3}{4}$ மணி வரை ஆங்கிலத்திற்குரிய கல்விப் பாடங்களும் இப்போது கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவு மையத்தில் அந்தக் குழந்தைகளுக்கு ஏற்றார்போல் கல்வி சொல்லிக் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் சத்துணவு மையத்தில் குழந்தைகள் சாப்பிடுகிற நேரத்தில் தான் வருகிறார்கள். சாப்பிட்டவுடன் போய்விடுகிறார்கள். கல்வி கற்பிப்பதாகத் தெரியவில்லை. எனவே இது பற்றி ஆவன செய்யப்படுமா? அது மட்டுமல்லாமல் சமையல் அறையில் புகை அடிக்கக்கூடிய இடத்தில் தலைவர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய படம் இருக்கிறது. புகை இல்லாத இடத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவருடைய படத்தை வைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திர குமாரி : மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 40 ஆயிரம் மையங்கள் இருக்கின்றன. இது கல்வி மையங்கள் தான். அங்கேயே கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. பள்ளிக்கூடங்களில் இருக்கிற சத்துணவு மையங்களில் சாப்பிடுவதற்கு அவர்கள் வருகிறார்கள். மீதி இருக்கிற 9,500 மையங்கள் ஐ.டி.டீ.எஸ். திட்டத்தின் கீழும், 15,000 மையங்கள் உலக வங்கி உதவியுடன் ஊட்டச் சத்து திட்டத்தின் கீழும் வருவதால் முன் பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ்தான் 10-வது வகுப்பு படித்த ஆசிரியர்கள் இந்தப் பயிற்சியை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய படத்தை எல்லா சத்துணவு மையங்களிலும் வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு ஆட்சிக்கு வந்தவுடனே புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். அப்படி எங்கேயாவது, ஏதாவது மையத்தில் வைக்கப்படவில்லை என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புகை அடிக்கிற இடத்தில் படம் இருக்கிறது என்று சொல்கிறார்.

திரு. இரா. தாமரைக்கனி : புகை இல்லாத இடத்தில் வைக்க வேண்டும்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட மையங்கள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக அது மாற்றி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னுடைய கடைசிக் காலம் வரை உடற்பயிற்சி செய்து கொண்டு வந்தார்கள். எனவே அவர் பெயரில் நடை பெறுகிற சத்துணவுக் கூடத்தில் பயிலும் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி உடற்பயிற்சி சொல்லிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே கல்விச் சாதனங்கள் மூலம் போதனையும், உடற்பயிற்சியும் 10.45 மணியிலிருந்து 11.15 மணி வரை சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா.க. இராதாகிருஷ்ணன்.

திரு. தா.க. இராதாகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இளம் குழந்தைகளை சாலை விபத்திலிருந்து தவிர்ப்பதற்காக சாலை விதிமுறைகளை எல்லாம் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் தான் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆகவே காலையில் தாய்மார்களே இந்தக் குழந்தைகளை மையங்களிலே கொண்டுவந்து விட்டுவிட்டுப் போகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 17]

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடத்தில் மொத்தம் எத்தனை இடங்களில் இப்படி முன்பருவக் கல்வி அமல்படுத்தப் படுகிறது? அந்தக் திட்டம் செங்கை எம். ஜி. ஆர். மாவட்டத் திலும் எடுத்துக்கொள்ளப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சரிடத்திலிருந்து அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.சி.டி.எஸ். திட்டத்தின்கீழ் 9,500 மையங்களும், 'டினிப்' திட்டத்தின் கீழ் 15,000 மையங் களும் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியின் போது தான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக எடுக்கப்பட்ட திட்டமாகும் இது. இதைத்தவிர செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 'சிடா' திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவி யுடன் 30 ஒன்றியங்களுக்கு இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. காந்தி ராஜன்.

திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு மையங்களைப் போல அந்த ஊட்டச் சத்து மையங்களிலும் குழந்தைகளை மதியநேரங் களில் கீழே தரையில் படுக்க வைத்திருக்கிறார்கள். பல முறை சொல்லியும் கூட சில மையங்களில் தொடர்ந்து இது நடந்துகொண்டிருக்கின்றன. எனவே அதை நீக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்கள் என்பது வேறு. ஊட்டச்சத்து மையங்கள் என்பது வேறு. சத்துணவு திட்டம் கல்விக் கூடங்களில் மட்டுமே நடத்தப் படுகிறது. ஊட்டச்சத்துக் திட்டம் 2 வயது முதல் 5 வரை வயது உள்ள குழந்தைகளுக்கானதாகும். இவர்களை கீழே படுக்க வைப்பது பற்றி சொல்லும் போது, எந்த மையங் களில் என்பதை குறிப்பிட்டுச் சொன்னால் அந்த மையங் களில் நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது அவர்களுக்கு பாயும் பெட்-ஷீட்டும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

VAIMAIYE VELLUM — TRUTH ALONE TRIUMPHS — TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[1993 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு தமிழ் ஆங்கிலம் பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் போது, சத்துணவின் சரித்திர நாயகன் டாக்டர் புரட்சித் தலைவர், தமிழகத்தின் நவீன சிற்பி டாக்டர் புரட்சித் தலைவி வாழ்க்கை வரலாறு பாடங்களாக, நர்சரி ரைம் ஆக சொல்லித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் தான் இங்கே அனுமதிக்கப்படுவதால், வாழ்க்கை வரலாறை பாடமாக சொல்லிக்கொடுக்க இயலவில்லை. ஆனால் பாடல்களாக அங்கேயே படங்களை வைத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. வே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடத்தில் பார்வையாளர் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் சில நேரங்களில் அங்கே பார்வையிடுகிறபோது அங்கேயுள்ள குறைபாடுகளைப் பற்றி அவர்களால் எழுதிவைக்கப்பட்டுவருகிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா? எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, அந்தந்த சத்துணவுக் கூடங்களை மாவட்ட ஆட்சித் தலைவரும், சத்துணவு திட்டத்தினுடைய நேர்முக உதவியாளர்களும் இப்போது பார்வையிட்டு அதற்குரிய நடவடிக்கைகளை ஒவ்வொரு மாதமும் எடுத்து இயக்குநர் அலுவலகத்திற்கும் அனுப்புகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படி குறிப்பிட்ட தகவலை எங்காவது எழுதி வைத்திருப்பார்களானால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதுகுறித்து அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.